வேறு சிலர், ஆசிரியராகச் சேர்ந்த தேதியிலிருந்து கணக்கெடுக்க வேண்டுமென்று கேட்கிருர்கள். ஆகவே, அதை எப்படி அரசு ஆராயப் போகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடவும்.

Course of Cosmetology

* 184. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Women's Polytechnic in Madras has started a course in Cosmetology; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) 1971–72-ஆம் ஆண்டு முதல் சென்னை மகளிர் பல் தொழிற் பயிற்சி கூடத்தில் ஒரு ஆண்டுகால ஒப்பனைப்பட்டப் படிப்பு பெண்களுக்காகவே நடத்தப்பட்டு வருகிறது. இப்பட்டப் படிப்பிற்கு வயது வரம்பு ஏதுமில்லை, புகுமுக வகுப்பு தேறியிருத்தல் வேண்டும். கல்விக் கட்டணம் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப் படவில்லை.

THIRU N. DENNIS : Sir, may I know the employment prospects of those who undergo this training?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றிய முழுவிவரக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. ஆனுல், ஒப்பனை கலையிலே தேர்ந்தவர்கள் ஆங்காங்கு ஒப்பனைக் கூடங்கள் வைக்கிருர்கள். வேறு பல இடங்களில், சினிமாத் தொழில் போன்ற மற்றவைகளுக்குப் போவதற்குக்கூட இந்த ஒப்பனைத் தொழில் மிக மிகப் பயன்படுகிறது. தனியாகவும் தொழில் கூடங்கள் வைத்திருக்கிருர்கள். ஆக, தனியாகத் தொழில் நடத்தவும் பயன் படுகிறது. வேலை வாய்ப்புகள் எந்த அளவுக்கு இருக்கின்றன என்று தனிக் கேள்வி போட்டால், விவரம் அறிந்து சொல்லலாம்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, ஒப்பனை செய்து கொள்வது என்பது நாட்டிலே, ஆண்களும், பெண்களும்—எல்லோருக்கும் பொதுவாக வரக்கூடிய நிலைமை இருக்கிறது. சில சமயத்தில்

1972 டிசம்பர் 15]

ஆண்கள், பெண்களோ என்று சந்தேகப்படக்கூடிய அளவுக்கும், பெண்கள், ஆண்களோ என்று சந்தேகப்படக்கூடிய அளவுக்கும் ஒப்பனையினுடைய தன்மைகள் மாறி இருக்கின்றன. ஆகவே, பெண்களுக்கு மட்டுமல்லாமல், ஆண்களுக்கும்கூட, வாய்ப்பினை அளிக்கின்ற வகையில், ஒப்பனைக் கூடங்களை ஏற்படுத்துவதன் மூலமாக, இதைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆண்களுக்கும்கூட ஒப்பனைக் கூடங்கள் ஆங்காங்கு இருக்கின்றன. சில முடி திருத்தகங்கள் ஆண்கள் எப்படித் தயார் செய்து அனுப்பலாம் என்று அதிலே ஈடுபட்டிருக்கின்றன. சில ஒப்பனைக் கூடங்களிலே ஆண்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்தப் புதுமுறையான ஒப்பனைக் கல்வி பயிற்றுவிக்கப்படுவது வரவேற்கத்தக்க ஒன்றாக இருக்கிற காரணத்தாலும், சென்னையிலே இருக்கிற திரைப்பட ஸ்டுடியோக்களில் கண்டிப்பாக இதிலே பட்டம் பெற்ற ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென்று வகுத்து, அப்பயிற்சி பெற்றவர்களுக்கு வேண்டிய தொழில் வாய்ப்புகளை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அத்தகைய சூழ்நிலை ஏற்படும்பொழுது அதுபற்றி யோசிக்கலாம்.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஒப்பனைக் கலை, சொல்லித் தராமலே நகர்ப்புறங்களில் தேர்ச்சி பெற்றிருக்கிற காரணத்தினால், கிராமங்களில் அந்த வசதி இல்லாததால், கிராமப்புறங்களில் இதுபோன்ற பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்க உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பயிற்சியை, பாலிடெக்னிக் தான் ஆரம்பிக்க முடியும். பயிற்சி பெற்றவர்கள், அவர்களுடைய தொழிலை எங்கு வேண்டுமானாலும் நடத்தலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பேரவை உறுப்பினர்கள், சட்டப்பேரவைக்கு வரும்பொழுது ஒப்பனை செய்து கொண்டு வருவதற்கு வழி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுதே எல்லோரும் ஒப்பனை செய்துகொண்டு தான் வருகிறார்கள். அவரவர்கள் தங்கள் தங்கள் நிலைக்கு ஏற்ப ஒப்பனை செய்து கொண்டுதான் வருகிறார்கள்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, இங்கே இருக்கிற பயிற்சிக் கூடத்தில் ஆண்களுக்கு அழகூட்டும் பவுடர்களைத் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, facial therapy, bleaching, art of make-up, hair dressing, styling and designing, scalp and hair treatment and good grooming department) என்ற அளவுக்குப் பாடத்திட்டத்திலே சேர்த்து இந்தப் பாடங்களெல்லாம் பயிற்சியாக அளிக்கப்படுகிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : பெண்களுக்காக தமிழ்நாட்டிலே கையாளப் பட்டு வருகின்ற முறைகள் மிகச் சிறந்த முறைகள் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த முறைகளெல்லாம் படிப்படியாக மறுக்கப்பட்டும், மறைக்கப்பட்டும் வருகின்றன. உதாரணமாக, பெண்கள் மஞ்சள் பூசிக் கொள்வது, மருதாணி பூசிக் கொள்வதெல்லாம் நல்ல ஒப்பனை முறைகள் என்று கூறப்படுகிறது. இன்றைய நாகரீகப் பெண்கள் இவற்றை உபயோகிப்பதில்லை யென்று சொல்லப் படுவதால், அவர்கள் அவற்றைப் பயன்படுத்த அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஒப்பனை முறைகளிலே புதிய முறைகள் போய், பழைய முறைகள் மீண்டும் வருகின்றன. நல்ல செல்வாக்குப் பெற்ற, புகழ்பெற்ற இரண்டு பேர் இந்த முறைகளைப் பின்பற்றத் தொடங்குவார்களானால் அதைப் பின்பற்றி மற்றவர்கள் தொடருவார்கள். இப்பொழுதுகூட, ஹிப்பீஸ் என்ற வகைகளிலே, 17-ம் நூற்றாண்டு, 18-ம் நூற்றாண்டுகளில் எப்படித் தலை மயிரை வளர்த்து வைத்திருந்தார்களோ அப்படித்தான் இப்பொழுது வந்திருக்கிறது. கொஞ்ச காலமாக, 19-ம் நூற்றாண்டிலே இருந்த முறை மாறியிருந்தது, இப்பொழுது மறுபடியும் 17-ம் நூற்றாண்டு முறை வந்திருப்பதை நாம் பார்க்கிறோம்.